**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**
**CASE NO.SC. 317 /2024**

**Deposition of P.W.** 5

Name : ஜெயக்குமார்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**Dated: 12.11.2025**

**Accused Present.**

<u>முதல் விசாரணை</u>–

நான் மாறாங்கோணத்தில் வசித்து வருகிறேன். கொத்தனாராக வேலை பார்க்கிறேன். என்னிடம் காட்டப்படும் 2வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 07.06.2024ல் மாலை 03.30 மணியளவில் மணலிக்கரையில் வைத்து எனது உறவினர் ஒருவரை பார்ப்பதற்காக தக்கலை மருத்துவமனைக்கு போனேன். மருத்துவமனை பக்கம் 2வது எதிரியை போலீசார் கைது செய்த போது கையெழுத்து போட்டுக்கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை போலீசார் மணலிக்கரை சந்தை பக்கமுள்ள ஒரு தெருவில் இருந்த ஓடையில் இருந்து கத்தியை கைப்பற்றியதற்காக கையொப்பம் வாங்கினார்கள். ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.3 அத்தாட்சி அ.சா.ஆ.4

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் கையொப்பம் செய்த தேதியில் வேலைக்கு செல்லவில்லை. எனது வீட்டிற்கும், தக்கலை மருத்துவமனைக்கும் 8 பர்லாங்குக்கு மேல் தூரம் இருக்கும். காயம்பட்டவருக்கு நான் உறவினர் என்றால் சரியல்ல. காயம்பட்டவருக்கு நான் சித்தப்பா முறை என்றால் சரியல்ல. 2வது எதிரிக்கு நான் மாமா முறை என்றால் சரியல்ல. கயாம்பட்டவர் வீட்டிற்கும் எனது வீட்டிற்கும் இடையே 3 கி.மீ தூரம் இருக்கும். தக்கலை அரசு மருத்துவமனை நாகர்கோவில் – திருவனந்தபுரம் தேசீய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது என்றால் சரிதான். அந்த சாலையில் அதிக போக்குவரத்து இருக்கும் என்றால் சரிதான். எனது தங்கையின் பிள்ளையை பார்ப்பதற்காக மருத்துவமனைக்கு வந்தேன். தங்கையையின் பிள்ளையை பார்ப்பதற்காக வந்ததாக போலீசாரிடம் குறிப்பிட்டு கூறவில்லை. நான் தக்கலை அரசு மருத்துவமனைக்கு வரும்போது மாலை 03.30 மணி இருக்கும். நான் கையொப்பம் போட்ட பேப்பரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்குத் தெரியாது. மணலிக்கரை சந்திப்பிலிருந்து – மணக்காவிளை ரோடு எந்த பக்கமாக செல்கிறது என்று எனக்குத் தெரியாது. ஓடை மணலிக்கரை சந்தையின் இடது பக்கமாக செல்கிறது. ஓடை 2–1/2 அடி ஆழம் இருக்கும். ஓடையில் அப்போது தண்ணீர் இல்லை. கத்தியின் நீளம் குறிப்பிட்டு தெரியாது. போலீசாரிடம் கத்தியின் கைப்பிடி என்ன நிறம் என்று சொன்னேனா என்றால் சிவப்பு நிறம் என்று சொன்னேன். கத்தியின் நீளம் தெரியாது பிடித்து குத்தக்கூடிய நீளம் தான். கத்தியின் நடுப்பகுதியின் அகலம் என்ன என்று என்னால் சொல்ல முடியாது. வழக்கு சம்மந்தமாக நான்

காவல்நிலையத்திற்கு போனேன். 3 நாட்கள் கழித்து காவல்நிலையம் போனேன். அத்தாட்சியில் உள்ள விபரங்களை படித்து பார்த்தேன். காயம்பட்டவர் எனது உறவினர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**
**CASE NO.SC. 317 /2024**

**Deposition of P.W.** 6

Name : ஸ்டாலின் ஜெகன்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**Dated: 12.11.2025**

**Accused Present.**

<u>முதல் விசாரணை</u>–

நான் மேக்காமண்டபம் கடமலைக்குன்றில் வசித்து வருகிறேன். நான் பெட்டிக் கடை வைத்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். கொற்றிக்கோடு காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

கடமலைக்குன்றிலிருந்து – கொற்றிக்கோடு காவல்நிலையம் 4 கி.மீ தூரம் இருக்கும். காயம்பட்டவர் எனக்கு பழக்கம் இல்லை. என் மீது பல்வேறு வழக்குகள் உள்ளது என்றால் ஒரு வழக்கு மட்டும் உள்ளது. நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று நான் பார்த்தேன். இவ்வழக்கின் குற்ற எண். சட்டப்பிரிவு ஆகியவற்றை

குறிப்பிட முடியாது. என் மீது பல வழக்குகள் உள்ளதால் காவல்நிலையத்தின் கையிருப்பு சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**
**CASE NO.SC. 317/2023**

**Deposition of P.W.7**

Name : ஜஸ்டின்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**Dated: 12.11.2025**

**Accused Present.**

<u>முதல் விசாரணை</u>–

நான் மாறாங்கோணத்தில் வசித்து வருகிறேன். கூலிவேலை செய்து வருகிறேன் என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் கொற்றிக்கோடு காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன். 1வது எதிரி காவல்நிலையத்தில் கையொப்பம் செய்ய வந்த போது போட்டுக்கொடுத்தேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் கொற்றிக்கோடு காவல்நிலைய பகுதியில் பிரபலமான நபர் என்றால் எல்லாருக்கும் தெரியும். சிறு, சிறு பஞ்சாயத்துக்களை தீர்ப்பது வழக்கம் என்றால் சரியல்ல. என் மீது பத்மனாபபுரம் நீதிமன்றங்களில் 3 வழக்குகள் நிலுவையில் உள்ளது. வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து விட்டு போலீசாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.